Registered as a Newspaper in Ceylon ✶ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபால் பெட்டி எண் : 49
போன் 589

National Tamil Daily

மலர் 9
இதழ் 167
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆடி 12 ரபி ஆகி. 19 வெள்ளிக்கிழமை [28-7-67]

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
ரப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# "உப உணவில் நாடு யாழ். மாவட்டத்தை நம்பியுள்ளது"

## காரினுல் மோதி வாலிபரைக் கொன்ருர்

### சுகர்ணே மகன் மீது வழக்கு

ஜாகர்த்தா, ஜூலை 27

பதவி இழந்த இந்தோனேஷிய ஜனதிபதி சுகர்ணேவின் மகன் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

காரை மோதி வாலிபரைக் கொன்றதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

அவர் காரை ஓட்டிச் செல்லும் போது, அது ஒரு மோட்டார் சைக்கிள் மீது பயங்கரமாக மோதியது.

மோட்டார் சைக்கிளில் வந்த வாலிபர் அதே இடத்தில் இறந்தார். அந்த வாலிபர் சுகர்ணேவின் பழைய மெய்க்காப்பாளரின் மகன்

சுகர்ணேவின் மகனுக்குக் காரோட்டும் லைசென்ஸ் கிடையாது. அவர் மீது வழக்குத்தொடரப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை இந்தோனேஷிய இராணுவ தளபதி சுஹார்டோ வெளிட்டார்.

## இலங்கைதேசிய கயரோக நிவாரண சங்க மாநாடு

### யாழ். நகரில் இன்று ஆரமபம

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை தேசிய கயரோக நிவாரண சங்கமகாநாடு இன்று காலை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் ஆரம்பமாகும். இம்மகாநாட்டில் சுகாதார அமைச்சர் எம்.டி.எச்.ஜெயவர்த்தனவும், கயரோக தடுப்பு நிவாரண சபைத்தலைவர் டாக்டர் ஜே.எச்.எப் ஜெயசூரியாவும் கலந்து கொள்வர்.

இன்று காலை 8-30 மணிக்கு மகாநாடு ஆரம்பமாகும். யாழ்ப்பாண அரசாங்க அதிபரும், கயரோக தடுப்புநிவாரண சங்க் வடமாநிலபிராந்திய கமிட்டித் தலைவருமான திரு. வேர்ணன் அபயசேகரா வரவேற்புரைநிகழ்த்துவார். டாக்டர் ஜே.எச்.எம். ஜெயசூரியா உரை நிகழ்த்துவார்.

சுகாதாரமந்திரி திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன சொற்பொழிவாற்றுவார். டாக்டர் ஏ.எம்.டி. ரிச்சார்ட் தலைமையில் காலை 9-15 மணிக்கு நடைபெறும் கருத்தரங்கில் டாக்டர் ஜே. டி. செனிவிரத்ன, டாக்டர் எஸ். இரத்தினசிங்கம், டாக்டர் வி எம். தேவதாசன், டாக்டர்

ஜி. எஸ். சின்னத்தம்பி ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

காலை 11-00 மணிக்கு டாக்டர் டி. டி. பி, எல்லப்பொல தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் டாக்டர் எஸ். ராஜசூரியர் டாக்டர் ஆர். கீர்த்தி சிங்கா திரு. எச். ஹலுகல்லே திருமதி என். எஸ். சி, பெரேரா ஆகியோர் கலந்து கொள்வார்கள். [அ.நி.]

## யாழ்ப்பாணத்தில் சுகாதார அமைச்சர்

யாழ்ப்பாணம், வெள்ளி

"சின்னவெங்காயம், செத்தல்மிளகாய் போன்ற உப உணவுப் பொருள்களின் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு நாடு முழுவதும் யாழ்ப்பாண மாவட்டத்தையே எதிர்பார்த்திருக்கிறது. இந்த உப உபணவுப் பொருள்களின் உற்பத்தியில் யாழ்ப்பாண மாவட்டம் முன்னணியில் நிற்கும் பெருமையையும் பெற்றிருக்கிறது."

இவ்வாறு சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜயவர்த்தன நேற்று மாலை யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் யாழ்ப்பாண மாவட்ட விவசாய கைத்தொழில் பொருட்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் யாழ்ப்பாண விவசாயிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் 11-20 மணிக்கு விமானத்தில் பலாலி விமான நிலையம் வந்துசேர்ந்த அமைச்சர் எம். டி. எச். ஜயவர்த்தனவை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா கைகுலுக்கி வரவேற்ருர். இதன்பின் மயிலிட்டி கிராமசபைத் தலைவர் திரு. எஸ். அருணசலம் அமைச்சரை மலர்மாலை சூட்டி வரவேற்

கொழும்பில்

ருர் வலிவடக்கு காரியாதிகாரி திரு. ஏ. எல். பட்ரிக் அமைச்சருக்கு மாலை சூட்டி மேளவாத்தியங்கள் முழங்க விமானநிலைய மண்டபத்துக்கு அழைத்துச்சென்ருர். யாழ்ப்பாண சுகாதார அத்தியட்சகர் டாக்டர் இராஜரத்தினம், பொதுஜனத் தொடர்பு அதிகாரி திரு. வெஸ்லி செல்வரத்தினம், வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோரும் அமைச்சரை வரவேற்றனர். அமைச்சருடன் சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கு. பாலசிங்கம், உதவிக் காரியதரிசி திரு. எப். துரைசிங்கம், ஆயுர்வேத கமிஷனர் திரு. எம். என். எஸ். குணரத்தின, உதவி உணவு அமைச்சர் திரு. பி. எஸ். இம்புலான ஆகியோரும் வந்திருந்தனர். விமான நிலையத்திலிருந்து அமைச்சர் குழுவினர் காங்கேசந்துறை விருந்தினர் விடுதிக்குச் சென்றனர்.

பிற்பகலில் யாழ்ப்பாண மாவட்ட விவசாய கைத்தொழில் பொருட்காட்சியை அமைச்சர் திறந்துவைத்தார். இவ் வைபவத்தில் அமைச்சர் ஜயவர்த்தன பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

யாழ்ப்பாண மாவட்டத்தில் 27 சத விகிதமான நிலப் பரப்புப் பயிர்ச் செய்கைக்கு ஏற்ற நிலமாகக் கணிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டம் சின்னவெங்காயம், செத்தல்மிளகாய் போன்ற உப உணவுப் பொருள்களின் உற்பத்தியில் முக்கியமாக முன்னணியில் திகழும் பெருமை பெற்றிருக்கிறதென்பது யாவரும் அறிந்த உண்மையே. சின்னவெங்காயத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு நாடு முழுவதும் யாழ்ப்பாண மாவட்டத்தையே நம்பியிருக்கிறது. நமது நாட்டிற்குத் தேவையான சின்னவெங்காயத்தில் எண்பது சத வீதமான வெங்காயம் யாழ்ப்பாண மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. இப்பொழுதுள்ளது போல் சின்னவெங்காய உற்பத்தி அதிகரித்து வருமானல் வெளிநாட்டிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்வதை முற்ருக நிறுத்தி விடலாமென்று கருதுகிருேம். பம்பாய்வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற புதிய பயிர்களையும் உற்பத்தி செய்வதிலும் யாழ்ப்பாண மாவட்டம் வெற்றி பெற்றிருப்பதும் தமக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

## 40 பேருக்கு நியமனம்

வெள்ளவத்தை, வியா.

1965-ம் ஆண்டு நடைபெற்ற தபாற்கந்தோர் தந்தியாளர்கள் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் மேலும் 40 பேருக்கு இம்மாதம் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## அரசாங்க ஊழியர் காத்திருப்பர்

கொழும்பு, புதன்

அரசாங்க ஊழியர்கள் மேற்கொள்ள விருந்த வேலைநிறுத்த நடவடிக்கைகள் மேலும் இரண்டு மாதங்களுக்கு பின்போடப்பட்டதாக அறியப்படுகின்றது.

சம்பள முரண்பாட்டு விசாரணைக் குழுவின் முடிவு வரும்வரைக்கும் காத்திருப்பதென்று அவர்கள் முடிவுசெய்திருக்கின்றனா.

## சிமெந்து உற்பத்தி 2428 தொன் வீழ்ச்சி காகிதஆலை 2385 தொன் அதிகரிப்பு

### 1966—ம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கை

கொழும்பு, வியாழன்

1966-இல் பொருளாதார வளர்ச்சியானது, சனத்தொகை அதிகரிப்பிற்கு சமனக அமையக்கூட போதியளவில் ஏற்படவில்லை. இலங்கையின் வர்த்தக மாற்றுவிதத்தில் ஏற்பட்ட பெரிய பாதகமான மாற்றத்துடன் இது இணைந்து, உண்மை வருமானத்தில் வீழ்ச்சியொன்றினை விளைவித்தது நாணய நிலைமைநிலை தளம்ப விடாது வைத்திருக்கப்பட்டது. பண நிரம்பலில் சிறு சுருக்கமொன்றுஏற்பட்டது. இவ்வாறு இலங்கை மத்திய வங்கி நாணயச்சபை நிதியமைச்சருக்கு சமர்ப்பித்த 1966-ம் ஆண்டுக்குரிய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ் அறிச்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது: காங்கேசன் துறை சிமெந்துத் தொழிற்சாலையின் சிமெந்து உற்பத்தியானது 1965 ம் ஆண்டின் 84,000 தொன்களிலிருந்து 1966-ம் ஆண்டு 81,572 தொன்களுக்கு 2428 தொன்களால் வீழ்ச்சியுற்றது. 1965 ம் ஆண்டில் காங்கேசந்துறை தொழிற்சாலை மிகக்கூடியளவு உற்பத்தியை எய்தியது. உயர்ந்தளவு உற்பத்திப் போக்குக் காணப்படவில்லை. புதிய சூளை இயங்கத்தொடங்கியபின் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாகவே இவ்வாண்டு உற்பத்தி வீழ்ச்சியுற்றது.

கிழக்குப் பகுதி காகித ஆலைக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியானது 1965 ஆம் ஆண்டில் 6696 தொன்களிலிருந்து 1966 ம் ஆண்டில் 908 தொன்களுக்கு, 2385 தொன்களால் பாராட்டத்தக்க முறையில் அதிகரித்தது. இப்போது இவ்வாலை முழு ஆற்றலிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பேதமற்ற சேவையே எமது பெரும் பணி'

## யாழ். றேட்டரி கிளப் தலைவர் கூறுகிறார்

### மணிவாக்கு

உள்ளத்திலும், ஒவ்வொரு செயலிலும் கருணை இருக்க வேண்டும். ஆனமட்டில் எந்த சிறு உயிருக்கும் இம்சை செய்யாமல் இருக்கப் பார்க்க வேண்டும் நம்மை வளைத்துப் பற்றிக் கொண்டிருக்கும் இம்சையில் இருந்து ஒவ்வொரு கணமும் இடைவிடாமல் தப்பித்துக் கொள்ள முயல வேண்டும்.

—மகாத்மா காந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க ஆடி 12உ (28 7-67)

## துணி உற்பத்தி

துணிவகைகளின் இறக்குமதியை மேலும் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறதாம். இதற்கு 1966-ம் ஆண்டில் இறக்குமதிசெய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த துணிகள் விரைவில் இறக்குமதியாகும் என எதிர்பார்ப்பதும் உள்நாட்டில் துணிவகைகளின் உற்பத்தியை அதிகரிக்க எதிர்பார்ப்பதுமே முக்கிய காரணங்கள் என்று கூறப்படுகின்றன. இரண்டொரு வருடங்களுக்கு முன்னிருந்த நிலையைவிட இன்று உடுபிடவைகளின் தட்டுப்பாடு பெருமளவு நீங்கியிருக்கிறதென்பது உண்மையே. ஆயினும் உள்நாட்டில் உடுபிடவைகளின் உற்பத்திக்கு இன்னும் போதிய உதவியும் ஊக்கமும் அளித்தால் நாம் விரைவில் உடுபிடவைகளில் சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியுமென்று நம்பலாம்.

உள்நாட்டில் துணி உற்பத்தியை அதிகரிப்பதற்காக நாடு முழுவதிலும் ஆயிரம் கைத்தறி நெசவு நிலையங்களை ஆரம்பிக்கும் உள்நாட்டு அமைச்சின் முயற்சி நிறைவேறிவருகிறது. இந்த நெசவு நிலையங்களில் சிலவற்றுக்கு மின்தறிகளும் கிடைத்திருக்கின்றன. மின்தறிவினியோகத்தில் பாரபட்சம் காட்டப்பட்டதாகப் புகார் கூறப்படுகிறது இனி மின்தறி இறக்குமதி செய்வதில் செலவும் அதிகரிக்கும். மின்தறி இல்லாவிடினும் கைத்தறி நெசவுக்கு ஊக்கமளிப்பதன் மூலம் துணிஉற்பத்தியை அதிககரிப்பதுடன் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையையும் ஓரளவு குறைக்கமுடியும்.

நெசவு நிலையங்களை அதிகமாக ஆரம்பிப்பதுடன் துணி உற்பத்தி அதிகரித்துவிடாது; வேலையில்லாத் திண்டாட்டமும் குறைந்துவிடாது. துணி உற்பத்திக்கு மூலப்பொருளான நூல் தட்டுப்பாடில்லாமல் கிடைக்கவேண்டும். சில மாதங்களுக்கு முன் நெசவுக்கு வேண்டிய நூல் கிடைக்காமல் இத்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபட்ட பலர் பெருங் கஷ்டமடைந்தனர். இன்றும்கூட நூல்தட்டுப்பாடு முற்றாக நீங்கிவிடவில்லை. நூல் இறக்குமதிசெய்வதுடன் நூலுக்குத் தட்டுப்பாடுஏற்பட்டதும் நூலின் விலையும் அதிகரித்துவிடுகிறது. இதனால்துணி உற்பத்திச்செலவு உயர்ந்துவிடுகிறது. அதிக விலை கொடுத்து உள்நாட்டுக் கைத்தறித்துணியை வாங்கும் மனநிலையில் மக்கள் இல்லை.

அரசாங்கம் இறக்குமதி செய்து வைத்திருக்கும் நெசவுநூலை விற்பனை செய்வதில்தேசிய ஜவுளிக் கூட்டுஸ்தாபனமும், கைத்தொழில் இலாகாவும் 'தகராறு' செய்துகொண்டு நூல் விநியோகம் சீராக நடைபெறமுடியாமல் 'இடையூறு' செய்வதாக ஒரு செய்தி கூறுகிறது. அரசாங்க இலாகாக்கள் நூல் இறக்குமதி செய்து சரியானமுறையில் விற்பனைசெய்ய முடியாவிட்டால் நூல்இறக்குமதியிலுள்ள கட்டுப்பாட்டை நீக்கி அந்தப்பொறுப்பை கூட்டுறவுத்துறை அல்லது தனியார்துறையில் விட்டுவிடுவதே மேல். இதன் மூலம் நல்லரக நூலும், வர்த்தகப் போட்டியின் மூலம் மலிவு விலையிலும் நெசவாளருக்குக்கிடைக்க வழிபிறக்கலாம்

உள்நாட்டில் துணி உற்பத்தி அதிகரித்தால் மட்டும் போதாது. வெறும் பருத்திச்சேலைகளும்சராங்களும் உற்பத்தி செய்வதால் துணிப்பிரச்னை தீர்ந்துவிடுமா? நம்நாட்டுப் பெண்கள் காஞ்சீபுரத்தையும், காஷ்மீரையும், மணிப்புரியையும் விரும்புவது ஏன்? காஞ்சீபுரம் போன்றகலையழகு நிறைந்த சேலைகளையும் இங்கு உற்பத்திசெய்ய ஊக்கமளிக்கப்படவேண்டும். முன்னொரு காலத்தில் இங்கு இதுபோன்றசேலைகள் உற்பத்தி செய்யப்பட்டன. மறைந்து வரும் அந்தப் பரம்பரையினருக்கு உதவியும் ஊக்கமுமளித்தால் அக்கலை மறுமலர்ச்சி பெறுமென எதிர்பார்க்கலாம்.

யாழ்ப்பாணம், வெள்ளி

'சேவையின் சின்னமாக விளங்கும் றேட்டரி பல துறைகளில் பலவித்திலும் மக்களுக்கு சேவை செய்து வந்துள்ளது. சாதி, இன, மத பேதமற்று குறுகிய நோக்கங்களுக்கப்பால நின்று தனது பணியை செம்மையோடு செய்து வருகிறது. ஐக்கியத்துடன் மனித சமூகத்தின் தேவைகளை உணர்ந்து தன்னாலான பணியை இயன்ற வரை செய்வதையே றேட்டரி கிளப் தனது தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. இந்தப் பணியின் வெற்றிக்கு சகல ஒத்துழைப்பும் தாருங்கள் என நான் வேண்டிக் கொள்கிறேன்.'

இவ்வாறு யாழ்ப்பாணம் றேட்டரி கிளப்பின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. டி. டௌலத்ராம் தமது தலைமை உரையில் எடுத்துக் கூறினர்.

யாழ்ப்பாணம் புளூறிபன் ஹோட்டலில் புதிய தலைவர் பதவியேற்பையொட்டி நடைபெற்றஇரவுவிருந்தின் போது பேசுகையிலேயே திரு. டௌலத்ராம் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

முன்னாள் தலைவரின் சேவை பற்றி அவர் குறிப்பிடுகையில் அவரது சேவை மகத்தானது என்றார்.

கிளப்பின் முன்னாள் தலைவர் திரு. பி. எஸ். ஜோசப் புதிய தலைவரிடம் தலைவருக்கான சின்னங்களை ஒப்படைக்கும்போது பேசியதாவது:-

றேட்டரி கிளப் அனாதைகளுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் உதவி தேவைப்படுகிறவர்களுக்கும் உதவி வந்துள்ளது. தொடர்ந்தும் உதவ முன்னிற்கிறது. இந்தப் பெரும் பணிக்கு எல்லோரது ஆதரவும் கிடைக்க வேண்டும் என்பதுவே எமது ஆசை, விருப்பம் எல்லாம்.

யாழ்ப்பாணத்திலுள்ள றேட்டரி கிளப் ஆற்றிவரும் தொண்டு கொழும்பிலுள்ள றேட்டரி கிளப்பினரால் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளதாகவும் திரு. ஜோசப் தெரிவித்தார்.

ஆர்வமும ஆற்றலுமுள்ள புதிய தலைவர்கிளப்பின பணி சீராக நடைபெற பெரிதும் உதவுவார் என்பதில் தமக்குச் சந்தேகமேயில்லையெனவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா பேசுகையில் யாழ்ப்பாணம் றேட்டரி கிளப் ஆற்றிவரும் தொண்டு தம்மைப் பெரிதும் கவர்ந்துள்ளதாகவும் இதன் பணி விரிவடைய இந்த இயக்கத்தில் பலர் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டுமெனவும் கூறினர்.

டாக்டர் எஸ். ராஜசூரியரும் பேசினர்.

---

## கலைவிழா

இமையாணன், வியா.

உடுப்பிட்டி வட்டாரப் பாடசாலைகளின் கலை கலாச்சார விழா ஒன்று உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 31-ம் திகதி நடைபெறவிருக்கிறது. சுமார் பதினைந்து பாடசாலைகள் பங்குபற்றும் இக்கலைவிழாவில் நாட்டுக்கூத்து உட்பட சிறந்தவை எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் முப்பத்திரண்டு கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும்.

ஃ ஃ ஃ

### வட்டுக்கோட்டையில்

சங்கானை, புதன்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நாளை மறுதினம் கலை விழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது, கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறும் இல்விழாவில் இயல், இசை, நாடகங்கள் இடம் பெறும்.

## இன்றைய பலன்

28-7-67
வெள்ளிக்கிழமை
[ஆடிமாதம்12-ந்திகதி]

நட்சத்திரம் - ரேவதி மாலை 5.02 வரை மேல் அச்சுவினி
திதி-சப்தமி
சுபநேரம் 6-02-7-32
ராகுகாலம் [10.32-12002]

மேடம்- அவதி மிக உண்டு
ரிஷபம்- தானிய விருத்தி
மிதுனம்- பொருள் தடைப்படல்
கடகம்- மனைச்சுகம்
சிம்மம்- வித்தை இலாபம்
கன்னி- தூக்கமிகுதி
துலாம்- வாழ்க்கை இன்பம்
விருச்சிகம்- கவலை மிகுதி
தனுசு- புண்ணிய விருப்பு
மகரம்- பதிசுகம்
கும்பம்- தெய்வ அருள்
மீனம்- கோபம் அதிகம்

## யாழ்ப்பாணமும் ஜெனிவாவும்

'யாழ்ப்பாண நகரம் ஜெனிவா நகரம்போலாகிக் கொண்டிருக்கிறது' என்று யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா நேற்று முன்தினம் நடைபெற்ற ஓர் இரவு விருந்தின்போது குறிப்பிட்டார்.

இயற்கை சிரித்து விளையாடும் சுவிட்சர்லாந்தின் தலைநகரமான ஜெனிவாவுக்கும யாழ்ப்பாண நகருக்கும் அப்படி என்ன உறவு இருக்கப்போகிறது என்று ஆவல் மீறிட காதை அவர் பக்கம் திருப்பினேன். யாழ்ப்பாணத்துக்கு பல விஷயங்களில் அபயமளிக்க வந்துள்ள அபயசேகரா பலரது ஆவலையும் புரிந்து கொண்டு பதிலளித்தார்.

'சமாதானத்துக்கான முயற்சிகள், நல்லுறவுகளுக்கான தொடர்பு பணிகள், ஆக்கபூர்வமான அத்திவாரமிடப்பட்ட வேலைகள் இவையெல்லாம் துரிதமாக இப்போது யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறன' என்பதை அவர் சுட்டிக்காட்டிய பின்னரே ஜெனிவாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் உள்ள உறவு என்ன என்பது புரிந்தது. வல்லரசுகள் தமது கடும் பிடிகளைத் தளர்த்தி, உலகில் ஒவ்வொரு மனிதனும் நிம்மதியாக சுதந்திரத்துடன் சுவாசிக்க வழி அமைப்பதற்கான ஆதார அமைப்புக்கள் மேற்கொள்ளப்படுவது ஜெனிவாவில் நடைபெறும் மகாநாடுகளில் தான் என்பது பலரறிந்த விஷயம். இதை கருத்தில் கொண்டுதான் அவர் ஜெனிவாவுடன் யாழ்ப்பாணத்தைத் தொடர்புபடுத்தினர். இன, மத பேதமற்று உயர்ந்த நிலையில் நின்று பணியாற்றும் றேட்டரி கிளப்பின் இரவு விருந்தில் தான் யாழ்ப்பாணத்துக்குப் பெருமை தரும் இந்த உவமையை அவர் எடுத்துக் கூறினர்.

தமிழே தெரியாத திரு. அபயசேகரா யாழ்ப்பாணத்தில் தமிழ் நாடகமொன்றைத் தயாரிக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளார் என்பதை டாக்டர் ராஜசூரியர் குறிப்பிட்டு யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நல்ல விஷயங்களில் திரு. அபயசேகரா பிரதம பாகம் ஏற்று வருகிறார் என சுவையும் அர்த்தமும் கலந்து கூறியபோது இரவு விருந்தின் சுவைக்கு அது மேலும் சுவை கூட்டுவதாக இருந்தது.

அரசாங்க அதிபர் வந்திருந்தால் அவர் முகத்தில் மட்டுமல்ல அந்த சூழலே சிரிப்புமயமாகிவிடும் என்பதுவும் டாக்டர் ராஜசூரியரின் அபிப்பிராயம்.

'கடத்தலுக்குப் பெயர் போனது யாழ்ப்பாணம்' என்ற வீணை பழிச்சொல், நிறைவற்ற மனக்குறையின் கறை இவற்றையெல்லாம் நீக்கி யாழ்ப்பாணத்தை ஜெனிவா போலாக்கிக் கொண்டிருக்கும் அரசாங்க அதிபரின் பணி தொடரட்டும். அவரது நற்பணிகளுக்கு எல்லாவித ஆதரவும் இங்கு கிடைக்கும் என்பதில் எனக்கு பூரண நம்பிக்கை இருக்கிறது.

— கணேஷ்

## நாட்டிலும் நகரிலும்

கதிர்காமம் போய்திரும்பி வந்த ஓர் அன்பர் தமது அனுபவம் ஒன்றைக் கூறினார்.

தமது இரண்டு வயதுப் பையனுக்கு நேர்த்திக்கடன் செய்வதற்கு அவர் கதிர்காமம் போயிருந்தார்.

கதிர்காமத்தில் அவருக்குப் பழக்கமான ஒருவரைச் சந்தித்தார். இவர் தண்டு கமண்டலதாரி இல்லாவிட்டாலும் விபூதி உருத்திராக்ஷதாரி. இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். ஆதலால் இருவரும் கூடி நின்று சுவாமி தரிசனம் செய்தார்கள்.

சாமியார் விபூதிச்சட்டி சுமந்துவிட்டு வந்து இரண்டு கைகளாலும் விபூதியை அள்ளியள்ளி பக்தர்கள் எல்லோருக்கும் வழங்கினார். நமது அன்பருக்கும் கொடுத்தார்.

சனக்கூட்டம் பொறுக்க முடியாமலிருந்தது. நெருக்கி இடித்துக் கொண்டு எல்லோரும் கதிர்காமத்தானைக் கும்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

இந்த நெருக்கடியில் அன்பர் தமது சிறுவனைத் தோளில் போட்டுக் கொண்டு வணங்கினார். அவனுடைய இரண்டு கரங்களும் அன்பரின் தோளுக்குப் பின்புறத்தில் தொங்கிக் கொண்டிருந்தன.

அக்கரங்களில் ஒரு சோடி காப்பு!

சாமியார் இதைக் கவனித்துவிட்டார்.

மெல்ல அந்தக் காப்புகளைக் கழற்றி மடியில் வைத்துக் கொண்டார்.

அன்பர் வழிபாடு முடிந்து சிறுவனைத் தூக்கிப் பார்த்தபோது காப்புகள் மறைந்துவிட்டதைக் கண்டார்.

அந்தநெருக்கடியில் அவர் என்ன செய்ய முடியும்? சிறுவனுடைய கைகளை மீண்டும் ஒரு தடவை பார்த்தார்.

என்ன ஆச்சரியம!

காப்புகள இருந்த இடங்களில் விபூதிபட்ட விரற்குறிகள் இருந்தன!

விபூதி வழங்கிய சாமியார் தம்முடன் கூட நின்ற அந்த தோழர்!

மெதுவாக அவரைத் திரும்பிப் பார்த்து, 'சாமியாரே! கந்தன் சன்னதியில் இப்படி ஏமாற்று வித்தை செய்ய வேண்டாம். குழந்தையின் காப்புகளைக் கொடுத்துவிடும்'! என்றார்.

சாமியார் ஒப்புக் கொள்ளுவாரா? 'ஐயையோ! என்ன அபராதம்! நான் எடுக்கவில்லையே' என்றார்.

அன்பர் உடனே விபூதி அடையாளங்களைச் சுட்டிக் காட்டினார்.

சிறிது நேரம் பொறுத்து சாமியார் எவருக்கும் தெரியாமல் தாம் திருடி வைத்திருந்த அந்த ஒரு சோடி காப்பையும் கீழே எறிந்துவிட்டு 'அதோ அங்கேயிருக்கிறது' என்று கூச்சலிட்டார்.

அன்பருக்கு விஷயம்விளங்கினாலும் பேசாமல் காப்புகளை எடுத்து வைத்துக் கொண்டு அப்பொழுது முதல் சாமியாரின் தொடர்பை அறுத்துக் கொண்டார்.

இறைவனுடைய பேரில் எத்தனை கோளாறுகள் தான் நடைபெறுகின்றன!

— வழிப்போக்கன்

---

### டாக்டர் நியமனம

உடுப்பிட்டி வியாழன் கரவெட்டி மேற்கில் நிறுவப்பட்டுள்ள நெல்லியடி பட்டினசபையின் புதிய இலவசஆயுர்வேதவைத்தியசாலைக்கு திரு. எஸ். இராஜவேலு ஆயுர்வேத டாக்டராக நியமிக்கப்பட்டுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாப்பிரயாணத்தைநடுவில் முறித்துவிட்டு பிரெஞ்சு அதிபர் டி கோல் பாரிஸ் திரும்பினர்

## கனடாப் பிரதமர் பியேர்ஸன் தமது வருத்தத்தை வெளியிட்டார்

### சந்தர்ப்பங்களை ஏற்படுத்தியது நாமல்ல என்றும் அவர்தெரிவித்துள்ளார்

ஒட்டாவா, ஜுலை 27

**பிரெஞ்சு ஜனுதிபதி டி கோல், தமது கனடாப்பயணத்தைநடுவில் முறித்துக்கொண்டு பாரிஸ் திரும்பியுள்ளார்.**

**அவர் கியூபெக்கில், பிரெஞ்சுப் பிரிவினையாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பேசிய பேச்சிஞல் ஏற்பட்ட சர்ச்சையைத் தொடர்ந்தே அவர்தமதுபிரயாணத்தைச் சடுதியாக முடித்துக்கொண்டு தாயகம் திருமபியுள்ளார்.**

ஒட்டாவாவுக்குச் சென்று கனடாப்பிரதமர் பியேர்ஸனைச்சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தவிருந்த டிகோல், தமது ஒட்டாவா விஜயத்தையும் ரத்துச் செய்துவிட்டார்.

பிரெஞ்சு மொழிபேசும் மக்கள் அதிகமாகவாழும் மொண்ட்ரீலில் சிலநிகழ்ச்சிகளில் பங்குபற்றிவிட்டு, டிகோல் பாரிசுக்குப் புறப்பட்டார்.

**எவரும் செல்லவில்லை**

டிகோலை விமான நிலையத்தில் வைத்து வழியனுப்பக் கனடா மந்திரிசபை உறுப்பினர் எவரும் செல்லவில்லை.

முன்னதாக, மொண்ட்ரீல் பல்கலைக்கழகத்தில் பேசுகையில், 'பிரெஞ்சு மக்களின் கனடாப் பிரிவினர்' என்று கனடாவாழ் பிரெஞ்சு மக்களை ஜனுதிபதி டிகோல் குறிப்பிட்டார்.

தங்கள் வருங்காலத்தைத் தாங்களே நிர்ணயிக்கவேண்டுமென்று அவர் அம் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

**அமெரிக்கா ஒரு சவால்**

அமெரிக்கா பற்றிக் குறிப்பிடுகையில், கனடாவின் பெரிய அண்டைநாடு என்று அமெரிக்காவை விவரித்த டிகோல், அதனுடையபெருப்பம் கனடாவுக்கு ஒரு சவாலாகும் என்ருர்.

**பியேர்ஸன் அறிக்கை**

பிரெஞ்சு ஜனுதிபதி டிகோல், தமது பிரயாணத்தை இடையில் முடித்துக் கொண்டு பாரிஸ்திரும்புவது புரிந்துகொள்ளக் கூடிய தொன்றே என்ருலும், அதற்கான சந்தர்ப்பங்கள் வருத்தத்துக்குரியன என்று கனடாப்பிரதமர் பியேர்ஸன், தாம் வெளியிட்ட அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

'ஆனுல், அந்த சந்தர்ப்பங்கள் கனடா அரசாங்கத்தினுல்ஏற்படுத்தப்பட்டவையல்ல' என்றும் பிரதமர் பியேர்ஸன் அவ்வறிக்கையில் கூறியுள்ளார்.

மந்திரிசபைக் கூட்டமொன்றைத் தொடர்ந்தே, அவர் தமது அறிக்கையை வெளியிட்டார்.

---

### கைகலப்பு

லாசா, ஜுலை 27

திபேத்தில் மா-சே-துங் ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளருக்குமிடையே ஆயுதந்தாங்கிய கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

— —

### ஊரடங்குச்சட்டம்

கல்கத்தா, ஜுலை 27

நக்ஸல்பாரியின் பாகிஸ்தான் எல்லைப் பகுதியில், மாலை தொடக்கம் காலை வரை ஊரடங்குச்சட்டம், காலவரையின்றி அமுலாக்கப்பட்டுள்ளது.

நேற்று, மேலும் ஒரு தீவிரவாதித் தலைவர் பொலிசாரிடம் சரணடைந்தார்.

---

### டில்லியை தட்டிக் கேட்பதில் அண்ணுதுரை திறமை வாய்ந்தவர்

#### கேரளமுதல் மந்திரி நமபூதிரிபாத் பாராட்டு

மதுரை, ஜுலை 27

**'டில்லியைத் தட்டிக் கேட்பதில் தமிழக முதல் மந்திரி அண்ணுதுரை சக்திவாய்ந்தவர்' என்று கேரள முதல் மந்திரி திரு. நம்பூதிரி பாத் கூறியுள்ளார்.**

மதுரை திலகர் திடலில் நடைபெற்ற இடதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக்கூட்டத்தில் அவர் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர்இவ்வாறுகுறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

'தமிழ் நாட்டில் அண்ணுதுரை ஆட்சி ஏற்பட்ட பிறகுஇப்போதுதான் முதல் முறையாக மதுரைக்கு வந்திருக்கிறேன்.

டில்லியில் உள்ள காங்கிரஸ் சர்க்காரை எதிர்ப்பதில் அண்ணுதுரை திறமையானவராகவும், சக்திவாய்ந்தவராகவும் இருக்கிருர். இதனுல் அவரிடத்தில் எனக்கு மிகுந்த மரியாதை உண்டு.

தமிழ் நாட்டில் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் பலம் குறைவு என்ருலும், அண்ணுதுரை ஆட்சி ஏற்படச் செய்ததில் எங்கள் கட்சியும் பங்குகொண்டதை நினைத்துப் பெருமைப்படுகிறேன்.'

---

## 'ஒப்பற்ற நெறி வகுக்கும் திருக்குறள்'

### தென்காசியில் கா. பொ. இரத்தினம்

தென்காசி, ஜுலை 27

தனி மனிதனைத் திருத்திச் சமுதாயத்தைத் திருத்தி உலகைத் திருத்தும் நெறியினையே திருக்குறள் திறம்பட உரைக்கின்றது. எந் நிலையிலுள்ளவரும் எண்ணி எண்ணியாங்கு எய்தி உயர்வு பெறும். ஒப்பற்ற நெறியை அது வகுத்துக் காட்டுகின்றது: மக்கள் உள்ளத்தில் உள்ள ஆற்றலை உணர்ந்து ஊக்கமுடையவர்களாகி உழைப்பால் உயரும் வழியைப் படிப்போர் கேட்போர் உள்ளத்தை ஈர்க்கும் வகையில் உரைக்கின்றது. இதனுலேயே இரண்டாயிரம் ஆண்டுகளாகத் திருக்குறள் போற்றப்பட்டு வருகின்றது'.

என்று கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் தென் காசித் திருவள்ளுவர் கழகத்தின் கூட்டத்தில் சிறப்புரை நிகழ்த்தும் பொழுது குறிப்பிட்டார்.

சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் எம்.எல். ஏ. தலைமை தாங்கினுர்.

திரு கா. பொ. இரத்தினம் தமது உரையில் தென்காசித் திருவள்ளுவர் கழகம் நாற்பது ஆண்டுகளாக வைகாசி அனுடத்தைவள்ளுவர் திருநாளாகக் கொண்டாடி வருவதையும் அக்கழகத்தின் பல்வேறு தொண்டுகளையும் பாராட்டினுர்.

**ம. பொ. சி**

திரு. ம. பொ. சிவஞானம் தமது தலைமை உரையில் சிறப்புச் சொற்பொழிவாளர் திரு. இரத்தினம் செய்து வரும் தமிழ் தொண்டுகளையும் திருக்குறள் பணிகளையும் பாராட்டினுர்.

---

## காமராஜர் வசிக்கும் வீட்டு வாடகை

### பாக்கி இருப்பதாக சட்ட சபையில் புகார்

புதுடில்லி, ஜுலை 27

டில்லியில் காமராஜர் வசிக்கும் வீட்டுக்குவாடகை பாக்கி இருந்ததாக டில்லி சட்டசபையில் புகார் செய்யப்பட்டது.

வீட்டு வசதி இலாகா கோரிக்கைமீது டில்லி சட்டசபையில் விவாதம் நடந்த போது இதுபற்றிக் குறிப்பிடப்பட்டது.

ஜனசங்கத்தைச் சேர்ந்த அங்கத்தவர் திரு. ஆர் எஸ். வித்தியார்தி பேசுகையில், காமராஜர் தங்கியிருக்கும் வீட்டுக்கு ரூ. 6000 வாடகைப் பாக்கி இருப்பதாகவும், அதை வசூலிக்க டில்லி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் புகார் செய்தார்.

ஆனுல் இந்தப் புகாரை வீட்டு வசதி இலாகா மந்திரி திரு ஜகந்நாதராவ்மறுத்துவிட்டார்.

''காமராஜர் தங்கி இருக்கும் வீட்டுக்கு வாடகைப் பாக்கி எதுவும் இல்லை'' என்று அவர் அறிவித்தார்.

— —

### கிராமத்தவர் முன்னேற வழி

கிளிநொச்சி, வியா.

'கிராம மக்கள் தமக்குள் ஐக்கியத்தை வளர்ப்பதன் மூலமே தமது கிராமத்தை முன்னேற்ற முடியும். கிராமத்தின் நலனை உத்தேசித்து நல்ல விஷயங்களில் ஒத்துழைக்க எல்லோரும் முன் வரவேண்டும்.'

இவ்வாறு கரைச்சி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. க. கிருஷ்ணபிள்ளை இராமநாதபுரம் கிராமமுன்னேற்றச் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

---

தொல்புரம், வியாழன்

தொல்புரம கிராம முன்னேற்றச் சங்கம், மத்திய சனசமூகநிலைய வாசகசாலையில் ஆதரவில் 29-ந்திகதி சனிக்கிழமை மாலை 6-30 மணியளவில் நிலைய முன்றலின் இலங்கை பிரித்தானிய தகவல் பகுதியினரின் இலவசப் படக்காட்சி காண்பிக்க காரியதரிசி திரு. சி. வரதராசா ஒழுங்குகளைச் செய்துள்ளார்.

---

## பலமணிநேர அமைதிக்குப்பின்

### அமெரிக்காவில் மீண்டும் இனக்கலவரம்

### சூட்டு சம்பவத்தில் மூவர் சுடப் பட்டனர்

டிட்ரொயிட், ஜுலை27

**பலமணிநேர அமைதிக்குப்பின் அமெரிக்காவில் மீண்டும் இனக்கலவரங்கள் தொடங்கியுள்ளன.**

டிட்ரொயிட்டில் நடைபெற்ற மற்றுமொரு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் தேசிய காவற்படையினர் இருவரும், சிவிலியன் ஒருவரும் சுடப்பட்டனர்.

**35பேராக உயர்ந்துள்ளது**

டிட்ரொயிட்டில், இனக்கலவரங்களினுல் உயிரிழந்தோர்தொகை35ஆகஉயர்ந்திருக்கிறது.

வாஷிங்டனில், ஒருநீக்ரோ தீவிரவாதியான மாணவர் கைது செய்யப்பட்டார். மேரிலாண்டில் நாசவேலைகளை அவர்தூண்டிவிட்டதாக அவர்மீது குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

**தலைவர்கள் வேண்டுகோள்**

நீக்ரோ சிவில் உரிமைத் தலைவரான டாக்டர் மார்டின் லூதர்கிங்கும், மற்றும் மூன்றுநீக்ரோ தலைவர்களும் இனக்கலவரங்களைநிறுத்தும்படி நீக்ரோக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இக்கலவரங்கள் நீக்ரோ மக்களுக்குப் பெருந் துன்பத்தையே கொண்டுவந்திருக்கின்றன என்றும், நீக்ரோ சிவில்உரிமைப் போராட்டத்துக்கும், பொதுவில்நாட்டுக்கும் அவை கேடு விளைவித்துள்ளன என்றும்அத்தலைவர்கள் கூறியுள்ளனர்.

**போக்கு மாறவேண்டும**

வெள்ளையர்களின் போக்கே நீக்ரோக்களுக்கு எதிரான சட்டதிட்டங்களுக்கு ஊக்கமளிப்பதாகவும், அவர்கள் தமது போக்கை மாற்றிக் கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

---

### சூயஸ் கால்வாயில் கப்பல் போக்குவரத்து

### இஸ்ரேலும் ஐ. அ. கு. வும் எதிரும் புதிருமான நிலை

கெயிரோ, ஜுலை 27

ஐ. நா. போர் ஒய்வுக்கமிஷனின் தலைவரான ஜெனரல் புல், கெயிரோவுக்கும் டெல்அவிவுக்கும் சென்றுவிட்டு ஜெரூசலம் திரும்பினுர்.

சூயஸ் கால்வாய் [illegible] போக்குவரத்து தமக்கு மட்டுமே சொந்தமாகுமென ஐ. அ. குடியரசு கருதுவதாக ஜெனரல் புல், இஸ்ரேல் பாதுகாப்பு மந்திரி ஜெனரல் தயானிடம் தெரிவித்தார்.

**இஸ்ரேல் நிலை**

[illegible] போக்குவரத்து உரிமை இருக்க வேண்டும் அல்லது ஒன்றுக்குமே இருக்கக் கூடாது என்பதே இஸ்ரேலின் கொள்கையாகும்.

சூயஸ் கால்வாய் எல்லைக் கோடுகளும் நிர்ணயிக்கப் பட வேண்டுமென்பது இஸ்ரேலின் நிலையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைலஞ்சம் பற்றி பிரதமருக்குப் புகார்

சங்கானை, திங்கள்

“பொதுத் துறையில் இன்று கைலஞ்சமும் நிர்வாகச் சீர்கேடுகளும் அடைந்திருக்கும் முக்கியத்துவத்தை கவனிக்கும்போது காலப்போக்கில் லஞ்சம் வாங்குவதையும் சட்டரீதியான தாக்க நேரிடுமோ வென அஞ்சவேண்டியிருக்கிறது.”

இவ்வாறு சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. இ. க. திருச்சிற்றம்பலம் பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்காவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இது தவிர சாதாரண ஒரு பொதுமகன் ஒரு அதிகாரிக்கெதிராக லஞ்சப் புகாரைச் செய்ய வேண்டியிருந்தல் அவர் கொழும்பிற்குச் செல்ல வேண்டியிருப்பது மட்டுமல்ல, இதையொட்டி தேவையற்ற செலவுகட்கும் வசதியீனத்திற்கும் ஆளாக வேண்டியிருப்பதால் சாதாரணமாக லஞ்சம் சம்பந்தமான புகாரைச் செய்வதற்கு யாரும் விரும்புவதில்லை. தற்போதைய நிலையில் அது முடியாத பட்சத்தில் முக்கிய நகரங்களான கண்டி, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலாவது உடனடியாக லஞ்ச இலாகா கிளைகளைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## அத்தியார் இந்து பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்

அச்சுவேலி, வியாழன்

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி பெற்றோர்-ஆசிரியர்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் கல்லூரி அதிபர் பிரம்மஸ்ரீ சீ. ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்றது. திரு. ம. க. நடராசா, திரு. த. ந. தேவராசன், திரு. கா. த. முத்தையா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: திரு. சி. கதிரவேற்பிள்ளை, திரு. அ. கணபதிப்பிள்ளை, தலைவர்: பிரம்மஸ்ரீ சீ. ஸ்ரீநிவாசன், உபதலைவர்கள்: திருவாளர்கள்: த. ந. தேவராசன், ந. இராமலிங்கம், செயலாளர்: திரு. ம. க. நடராசா, பொருளாளர்: திரு. வை. வியாகேசர் 10 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

கல்லூரியின் தர உயர்வுக்குத் தொடர்ந்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க ஆவன செய்வதென்றும், விளையாட்டு மைதானத்தை விஸ்தரிப்பதென்றும், வேறு பல விஷயங்கள் பற்றியும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## சிரமதானிகளுக்கு அரசாங்க அதிபர் பாராட்டு

நெடுந்தீவு, வியா.

“வடமாகாத்ணதில் நான் பார்த்த பல சிரமதான வேலைகளில் காளான் முனை மீன் பிடித்துறைமுக வேலை மிகவும் கஷ்டமானதும் பெரியதொரு வேலைத்திட்டமுமாகும். ஆண்கள் மட்டுமன்றிப் பெருந் தொகையான பெண்களும், சிறுவர்களும் சலியாது கடலில் நின்று வேலை செய்வதையும் இப்படியான நீண்டகால வேலைத்திட்டத்தைச் சிரமதான மூலம் செய்து வருவதையும் எவருமே போற்றாமல் இருக்க முடியாது” எனயாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா நெடுந்தீவு காளான் முனையில் சிரமதானம் மூலம் அமைக்கப்பட்டு வரும் மீன் பிடித்துறைமுகத்தைப் பார்வையிட்ட போது கூறினார்.

திரு செல்வம் கஸ்பார் தலைமையில் நடந்த வரவேற்புக் கூட்டத்தில் திரு. யோ. கொனிஸ்ரன் சிரமதானிகளுக்கு அரசாங்கம் செய்து தரவேண்டிய முக்கிய விஷயங்கள் அடங்கிய மகஜர் ஒன்றை வாசித்து அரசாங்க அதிபரிடம் கையளித்தார். திரு. எஸ். ஆனந்தனும் பேசினார்.

## எதிரி விடுதலை

காங்கேசன்துறை, புதன்

பலாலியைச் சேர்ந்த அலெக்சாண்டர் என்பவரின் மதிலை, கவலையீனமாக ஜீப்பை ஓட்டி 400 ரூபா சேதம் விளைவித்ததாக வல்வெட்டித்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த ஜீப் டிரைவர் எஸ். பி. கருணரத்னமீது காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் சாட்சியங்களில் முரண்பாடு காணப்படுவதாகக் கூறிய நீதிபதி எதிரியை விடுதலை செய்தார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

## ஆசிரியர் சங்க பூநகரிக் கிளை

பூநகரி, வியாழன்

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் பூநகரிக் கிளையின் கூட்டம் பூநகரி மகாவித்தியாலய மண்டபத்தில் பொதுச் சபைத் தலைவர் திரு. ரி. எஸ். சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது. பிரசாரக் காரியதரிசி திரு. கே. சிவகுருநாதன், தென்மராட்சிக்கிளைக் காரியதரிசி திரு. எஸ். சிவப்பிரகாசம், மகாவித்தியாலய அதிபர் திரு. எம். சிவானந்தம், பொதுச்செயலாளர் திரு. ஏ. பொன்னம்பலம் ஆகியோர் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டனர்.

இப்பகுதியைச் சொந்த இடமாகக் கொண்ட ஆசிரியர்களுக்கு அவர்கள் விருப்பப்படி ஏற்ற இடங்களைக் கொடுக்கவேண்டுமென்றும், இப்பகுதியில் இரண்டு வருடங்களுக்கு மேல் சேவையாற்றியோரை யாழ்ப்பாணக் குடாநாட்டில் அமைந்த வசதியான இடங்களுக்கு மாற்றவேண்டும் என்று கல்விப் பகுதியைக் கோரும் தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எம். சிவானந்தம், உபதலைவர்கள்: திருவாளர்கள்: எம். செல்லையா, எ. இராசையா, செயலாளர்: திரு. கே. சிற்றம்பலம், உபசெயலாளர்கள்: திருவாளர்கள்: கே. வீரகத்திப்பிள்ளை, எஸ். சுந்தரமூர்த்தி, பொருளாளர்: திரு. பி. தம்பு, உபபொருளாளர்: திரு. வே. சிவதம்பு. நிர்வாகசபை அங்கத்தவராக மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## எதிரி விடுதலை

காங்கேசன்துறை, வியா.

‘அக்கா அக்கா என்று அபயக்குரல் கேட்டது. நான் ஓடிவந்து வாசலில் நின்று பார்த்தேன். எதிரி எனது தம்பி இராஜரத்தினத்திற்கு கன்னததில் அடித்துக் கொண்டிருந்தார். உங்களை யார் அடிக்கச்சொன்னது என்று கேட்டேன். உடனே எதிரி எனது மயிரில் பிடித்து தள்ளிவிட்டு வயிறுனல் அடித்தார்.’

மல்லாகம் கோர்ட்டில் நேற்றுநடைபெற்ற தாக்குதல் வழக்கில் 19 வயதான இளம்பெண் இந்திராணி தேவி சாட்சியமளித்த போது மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கில், கந்தரோடையைச் சேர்ந்தகிருஷ்ணர் கந்தசாமி என்பவர் அதே ஊரைச்சேர்ந்த தம்பிராசா இராசரத்தினம் என்பவரை அடித்ததாகவும், அவரது சகோதரி இந்திராணிதேவியை வயிறுனல் அடித்துகாயம் விளைவித்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

விசாரணையின் பின் மாஜிஸ்டிரேட் சாட்சியங்கள் முரண்பாடாக இருந்ததால், எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

## புதிய நிர்வாகிகள்

உடுவில், வெள்ளி

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற மானிப்பாய் விளையாட்டுக்கழகப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டார்கள். போஷகர் திரு. வி. தர்மலிங்கம் [எம். பி] தலைவர் திரு. சி. சுப்பிரமணியம், உபதலைவர்கள் திரு. ஜே பி. நாகலிங்கம், திரு. எம். பேராயிரவர், திரு. எஸ். பத்மநாதன், செயலாளர் திரு. எஸ். டி. பால்ராஜா, உப செயலாளர் திரு. வி. மண்டலேஸ்வரன், பொருளாளர் திரு. எஸ். ரி. சாரி, உதவிப் பொருளாளர் திரு. என். பரமேஸ்வரன் கணக்காய்வாளர் திரு. இ. எம். சுப்பிரமணியம், மைதானக்காரியதரிசி திரு. ரி. பூலோகேந்திரன். ஐந்துபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## நிர்வாகிகள்

காங்கேசன்துறை. வியா

வலி-வடக்குகாரியாதிகாரி பிரிவு விளையாட்டுப் பகுதி நிர்வாக சபை அங்கத்தவர்கள் தெரிவு, விளையாட்டுப் பகுதி உத்தியோகத்தர் திரு. கே. கந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் ச. பொன்னம்பலம், உபதலைவர்-ச. கனகசபாபதி இணைக் காரியதரிசிகள்-சி. சபாநாதன், சி. வன்னியசிங்கம், தனுதிகாரி-சி. கே. சிவலிங்கம். 11பேர்கொண்ட நிர்வாகக்கமிட்டியொன்றும் தெரியப்பட்டது.

## கி. ச. வட்டார இடைத்தேர்தல்

பூநகரி, வியாழன்

பூநகரி கிராமசபை ஆறும் வட்டார இடைத்தேர்தல் சென்றவாரம் நடைபெற்றது. இந்த இடைத்தேர்தலுக்கு திரு. வி. பரமநாதன் திரு. ரி. செல்வரத்தினம் ஆகியோர் போட்டியிட்டனர். திரு. வி. பரம்நாதனுக்கு 116 வாக்குகளும் திரு ரி. செல்வரத்தினத்துக்கு 80 வாக்குகளும் கிடைத்தன. முப்பத்தாறு மேலதிக வாக்குகளால் திரு. வி. பரமநாதன் வெற்றியீட்டினார்.

## பொலிஸார் மீது வழக்கு

முல்லைத்தீவு, செவ்.

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் தனிப்பட்ட வழக்கொன்றை தண்ணீரூற்று வாசியான பொன்னம்பலம் நல்லையா தாக்கல் செய்துள்ளார்.

இவ்வழக்கில் பொலிஸ் சார்ஜன்ட் சிவஞானம், எம். எஸ். கந்தசாமி, கந்தப்பு ஐயாத்துரை மற்றும் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சட்ட விரோதமாகக்கூடி நல்லையாவின் காணிக்குள் சென்றுஅங்குள்ள வீட்டிற்கு சேதம் விளைவித்து, நல்லையாவின்மகன் நடனசபாபதியை 3-வது எதிரியான சார்ஜன்ட் சிவஞானமும், இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும், தாக்கி காயம் விளைவித்தாகவும், நல்லையாவை 3-வது எதிரி தாக்கியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பொலிசாரால் தாக்கப்பட்டதாக கூறப்படும் நடனசபாபதியை சிறைப்பாதுகாவலர் நீதிமன்றத்திற்கு தூக்கிக்கொண்டுவந்தனர். மாஜிஸ்திரேட் இ. பரமகுரு விசாரணையை ஆகஸ்ட் 7-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

## வலி வடக்கு விளையாட்டுவிழா

சுன்னுகம், வியாழன்

வலிகாமம் வடக்குதேசிய அரசாங்க விளையாட்டுப் பகுதியினரால் நடாத்தப்படும் முதலாவதுவிளையாட்டுவிழா ஆடி மாதம் 28-ம்நாள் ஆரம்பமாகி ஆவணி மாதம் 27-ம்நாள் முடிவடையும். வலிவடக்கிலுள்ள எல்லா சன சமூக நிலையங்களும், விளையாட்டுக் கழகங்களும் தங்கள் கிராமசேவையாளர் ஊடாக அவ்விழாவில் பங்கு பற்றலாம்.

## சிறுமியின் பரிதாபம

திருக்கோணமலை, செவ்.

மூன்று அங்குல அளவான ஆணியொன்றை வாயில்வைத்துக்கொண்டு விளையாடிய எட்டுவயதுச் சிறுமியின் தொண்டைக்குள் அந்த ஆணி இறுகிவிட்டது. தொண்டைக்குள் குத்தப்பட்டு மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது வேதனைப்படும் இந்தச்சிறுமி திருக்கோணமலை அரசாங்க மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## இறந்தபின்பும அமைதியில்லை

வவனியா, வியா

தகனக்கிரியைக்காக மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்ட பிரேதம். 2 மணித்தியாலய கோஷ்டிச் சண்டையில் அகப்பட்டு, 5 மணித்தியாலயம் தாமதித்து தகனத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது. இச்சம்பவம் வவனியாவில் நடந்தது. மயானத்துக்குச் செல்லும் பாதை கம்பி வேலியால் தடுக்கப்பட்டிருந்ததாகவும், இத்தடையைத்தாண்டி பிரேதம் கொண்டுசெல்ல முயற்சிக்கப்பட்டபோதே இருதரப்பினருக்கும் கைகலப்பு மூண்டதாகவும் இதுபற்றிக்கூறப்பட்டது.

சண்டை முற்றி உச்சக்கட்டத்தை அடைந்ததாகவும், பொலிசார் தலையிட்டும் நிலைமை கட்டுக்கடங்காது போனதாகவும், வவனியா நகரசபைத் தலைவர் திரு. ம. பொன்னையா தலையிட்டு நிலைமையைசுமுகநிலைக்குக்கொண்டுவந்ததாகவும் 5 மணித்தியாலயம் இங்கு தாமதிக்கப்பட்ட பிரேதம் கம்பிவேலி பிரிக்கப்பட்டு மீண்டும் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரியவந்தது.


சிறந்த ஜெம்ஸன்



உங்களுக்கும் உங்கள் மகனுக்கும்

GEMSUN GARMENTS

- X சுருங்காதது
- X இறுக்கமானது
- X விசேஷ உறுதியான பொக்கட்டுகள்
- X அளவும் திறமையும் ஒருபோதும் மாருதது
- X பிழையான வேலை இல்லை என்ற உத்தரவாதம்
- X ஒவ்வொரு சிறந்த கடையிலும்கிடைக்கும்.

வியாபாரிகள்

யாழ்ப்பாணம்:
தொலாரம்ஸ், பிரதானவீதி.
தயரம்ஸ், பிரதான வீதி.
பொகுமால்ஸ், பிரதானவீதி.

பின்வரும் இடங்களில் ஏஜெண்டுகள் தேவை

- X திருக்கோணமலை
- X மட்டக்களப்பு
- X கல்முனை
- X அம்பாறை
- X மன்னார்
- X காங்கேசன்துறை

வர்த்தக விசாரணைகள்:-
லக்கி பைவ் இண்டஸ்றீஸ்
பிரதான வீதி, கொழும்பு.
டெலிபோன்:- 3184

சால்சட்டை, அரைக்காற்சட்டை, சேட்டுகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளமபரம

### கட்டைவேலிக் கிராமசபை

## விளம்பரம்

கீழ்க்காணும் வேலைகளுக்கு 1967-ம் ஆண்டு ஆவணி மாசம் 16-ம் திகதி புதன் கிழமை வரையும் கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கேள்விப் பத்திரங்கள் ஆவணி மாசம் 15-ம் திகதி பகல் 12 மணிவரையும் வழங்கப்படும். ஏனைய விபரங்கள் கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

1. இம்புலிட்டிக் கடலில் வான் அமைத்தல்
2. கிராமசபைக் கந்தோரில் கிணறு வெட்டுதல்.

S. C. Manicavasagar,
நிர்வாகஸ்தர்.
கட்டைவேலி கி. ச.,
காரியாலயம்,
அல்வாய்,
26-7-67. 37

## புலவர் நினைவுகள்

சுன்னுகம் குமாரசுவாமிப் புலவரது வாழ்க்கைச் சித்திரங்களும் நகைச்சுவை ததும்பும் உரையாடல்களும் உள்ளன. விலை ரூபா ஒன்று.

சண்முகநாதன்
புத்தகசாலை,
38 யாழ்ப்பாணம்.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 9-45
பேரயா தினங்களில் 4காட்சிகள்
கண்ணதாசன்
கே. ஆர். விஜயா
நடித்த
கறுப்புப்பணம்

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30
ஜெய்சங்கர்
எல். விஜயலெட்சுமி
நடித்த
இருவல்லவர்கள்


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 28-7-67

**செய்திகள்:** காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 பண்ணுருந்தமிழ் — ஜி. பாலசுப்பிரமணியம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 தொழிலாளர்வேளை.

இரவு 6-15 பஜனை — இராமகிருஷ்ண மடத்திலிருந்து அஞ்சல், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 முத்திநெறி — சைவசஞ்சிகை, 7-45 திருமுறைப் பயிற்சி — பி. ஏ. எஸ். ராஜசேகரன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 — பாட்டு பாலம் லட்சுமணன், 10-15 தேர்ந்த இசை.

---

## மானிப்பாய் இந்து இல்லப் போட்டிகள்

உடுவில், வியா.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. போட்டி முடிவில் வாகீசர் இல்லம் முதலிடத்தையும், சுந்தரர் இல்லம் இரண்டாம் இடத்தையும், மாணிக்கர் இல்லம் மூன்றுமிடத்தையும் சம்பந்தர் இல்லம் நான்காம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

## யாழ். பிரதேச விளையாட்டுப் போட்டி 'ஏ', 'டி' பிரிவு முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற யாழ். மாவட்ட பாடசாலைகள் பிரதேச விளையாட்டுப் போட்டிகள் அவ்வப் பாடசாலை மைதானங்களில் நடைபெற்றன. இறுதிப் போட்டிகள் நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின. இறுதிப் போட்டிகள் இன்று முடிவுறும். நடைபெற்று முடிந்த விளையாட்டுப்போட்டிகளின் முடிகள் வருமாறு:

### 'ஏ' பிரிவு முடிவுகள்

100 யார் ஓட்டம் 14 வயதுக்குக் கீழ்ப்பட்டோர்- எஸ். கலைமணி, எஸ். பாஸ்கரன், ஜே. ஜோசப்.

மத்தியபிரிவு:- எம். விமலேசன், பி. இராசகாந்தன் என். ஸ்ரீபாலகங்காதரன்-

மேற்பிரிவு;- கே. சிவஞானம், கே. இராசரத்தினம், எஸ். சண்முகலிங்கம்.

200 யார் ஓட்டம் கீழ்ப் பிரிவு:- விமலேசன், எஸ். ஸ்ரீதரன், பி. இராசகாந்தன்

மேற்பிரிவு;- கே. சிவஞானம், எஸ். இராசரத்தினம், எஸ். சண்முகலிங்கம்.

400 யார் ஓட்டம் மேற் பிரிவு- எஸ். சுந்தரலிங்கம் கே. சத்தியமூர்த்தி, எம். தில்லையம்பலம்.

800 யார் ஓட்டம் மேற் பிரிவு- என். வடிவேஸ்வரன், என். விஜயரத்தின சிங்கம், எஸ். மனோகரன்.

1500 யார் ஓட்டம் மேற் பிரிவு- வி. சிவபாலன், என். தெய்வேந்திரம், என். ஆனந்தகுமார்.

110 யார்தடைஓட்டம் மேற்பி- ஆர். கிறிஸ்ரி மனோகரன், எஸ். தர்மராசா, ஆர். நித்தியானந்தீஸ்வரன்

100 யார் தடை ஓட்டம் கீழ்ப் பிரிவு. என். சந்திரகுமார், எஸ். குமாரசாமி, சி. விக்னேஸ்வரன்.

குண்டெறிதல் கீழ்ப்பிரிவு- எஸ். ஸ்ரீவிக்னேஸ்வரராசா, பி. இராசகாந்தன், எஸ். குமாரசாமி.

மேற்பிரிவு- ஆர். சுகுணசபேசன், எஸ். ஸ்ரீகாந்தராசா, ஆர். வேலாயுதம்.

பரிதிவட்டம்எறிதல் கீழ்ப் பிரிவு- டபிள்யூ. ரஞ்சன் குமார். எஸ். ஸ்ரீவிக்னேஸ்வரராசா, கே. ஜெயசூரியர்.

மேற்பிரிவு- எஸ். ஸ்ரீகாந்தராசா, ஆர். சுகுணசபேசன், எஸ். ரவீந்திரன்.

ஈட்டி எறிதல் கீழ்ப்பிரிவு- ஆர். ஸ்ரீதரன், எஸ். சிவராசா, ரி. தர்மேஸ்வரா.

மேற்பிரிவு- எஸ். ஸ்ரீகாந்தராசா, ஆர். ராஜமனோகரன்- என் சிவபாதசுந்தரம்

உயரம் பாய்தல்- கீழ்ப் பிரிவு- எம். புஷ்பராசா, எஸ். குமாரசாமி, ஜே. டி. வரதராஜன், எல். இராமேஸ்வரன். மேற் பிரிவு- கிறிஸ்ரி மனோகரன், கே. தெய்வேந்திரா, எஸ். இராஜரத்தினம்.

நீளம்பாய்தல்- கீழ்ப் பிரிவு- எம். விமலேசன், எஸ். ஸ்ரீதரன், பி. மனோகரன். மேற்பிரிவு- ஆர். சுகுணசபேசன், கே. சிவஞானம், பி. நித்தியானந்தீஸ்வரன்.

தொங்கிப்பாய்தல்- மேற் பிரிவு- எஸ். சந்திரலிங்கம், பி. நித்தியானந்தீஸ்வரன், கே. சத்தியமூர்த்தி.

### 'டி' பிரதேச முடிவுகள்

100 யார் ஓட்டம்- 14 வயதுக்குக் கீழ்ப்பட்டோர் என். சிவபாலன், என். மகேசன், எஸ். தங்கவேல். கீழ்ப்பிரிவு- கே. விநாயகப் பெருமான், எஸ். தெய்வேந்திரன், என். தங்கதுரை. மேற்பிரிவு- கே. சிவக்கொழுந்து, எஸ். செல்வச்சந்திரன்.

200 யார் ஓட்டம்- மேற் பிரிவு- கே. விநாயகப்பெருமான், என், தங்கத்துரை, ஆர். தசரதன். மேற்பிரிவு- கே. சிவக்கொழுந்து, எஸ். செல்வச்சந்திரன், எஸ். விஸ்வலிங்கம்.

400 யார் ஓட்டம்- மேற் பிரிவு- எம். ஆர். அப்துல் முனாப், கே. கனகரத்தினம், பி. பாலச்சந்திரன்.

1500 யார் ஓட்டம்-மேற் பிரிவு- கே. கனகரத்தினம், எம், ஜெயபாலசிங்கம், பி. பாலச்சந்திரன்.

110 யார் தடைஓட்டம்- மேற்பிரிவு- ஜி- ஞானரமணன், ரி. அருணகிரிராசா, வி. சிவதாசன்.

100 யார் தடைஓட்டம்- கீழ்ப்பிரிவு- ஜி. குகதாசன், என்: கதிரவேலு, எஸ். சோதீஸ்வரன்.

குண்டெறிதல்- கீழ்ப் பிரிவு- எஸ். சுந்தரலிங்கம், எம். ஸ்ரீகுமார், எம். சிதம்பரநாதன். மேற்பிரிவு- ஆர். குகராசா, எம். பாலசுப்பிரமணியம், எஸ். மகாலிங்கம்.

பரிதிவட்டம் வீசுதல்- கீழ்ப்பிரிவு- எம். சிதம்பரநாதன், ஐ. சிவபாலசுந்தரம், ஏ. சிவம். மேற்பிரிவு ஆர். குகராசா, ரி. இராசசிங்கம், எம். பாலசுப்பிரமணியம்.

ஈட்டிஎறிதல்- கீழ்ப்பிரிவு- எம். சிதம்பரநாதன், ஐ. சிவபாலசுந்தரம், எஸ். ஜெய் கோபாலசாமி. மேற்பிரிவு- எம். பாலசுப்பிரமணியம், எஸ். மகாலிங்கம், பி. திரவியம்.

உயரம்பாய்தல்- கீழ்ப் பிரிவு- கே. மனோகரன், எஸ். தெய்வேந்திரன், கே. ஸ்ரீறங்கநாதன் மேற்பிரிவு- எம். கந்தசாமி, எஸ். அருந்தவராசா, ஜி. ஞானரமணன்.

நீளம்பாய்தல்- கீழ்ப்பிரிவு என். தங்கத்துரை, எஸ். தெய்வேந்திரன், எஸ். சிவனேசசுந்தரம். மேற்பிரிவு- கே. ஸ்ரீதரன், ரி. அருணகிரிராசா, எம். திருச்செல்வம்.

## மாணவர் வெற்றி

சங்கானை, வியா.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவர் கோஷ்டிக்கும், ஆசிரியர் கோஷ்டிக்குமிடையில் மேற்படி கல்லூா மைதானத்தில் நடைபெற்ற சினேக பூர்வமான கரப்பந்தாட்டப் போட்டியில் மாணவர் முறையே இரு ஆட்டங்களிலும் வெற்றியீட்டினர். திரு. பேரானந்தசிவம் மஸ்தியஸ்தராகக் கடமையாற்றினர்.


மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
பலாஜி ஜெயஸ்ரீ
நடித்த
தெய்வபலம்

REGAL - JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Roger Browne & Scilla Bable
in
The Revenge of Spartacus
(In Technicolor)


## வரி விளம்பரம

### தேவை

பூசகர்

மன்னார் பட்டினத்தில் உள்ள பிள்ளையார் கோவிலுக்கு ஒரு பிராமணப் பூசகர் தேவை. சம்பளம் மாதம் 60-00. படித்தரம் மாதம் 45 சேர் அரிசி. இவை தவிர வீட்டு வசதியும் உண்டு. அர்ச்சனை வருமானம் பூசகர்க்கே. விரும்பியோர் ஆகஸ்ட் 15ம், 16ம், 17ம், 18ம் திகதிகளில் நற்சார்ட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். க. கா. வைத்திலிங்கம், முகாமையாளர், உப்புக்குளம், மன்னார். 2438

### விற்பனைக்கு

வீடு

நாயன்மார்கட்டு இராசேஸ்வரி வீதி, இலக்கம் 9/7-ல் இருக்கும் 4 பரப்புக் காணி கல்வீடு, கிணறு, கக்கூசு எல்லா வசதிகளுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: கி. துரைசிங்கம், பிரசித்த நொத்தாரிஸ், ராசா கட்டிடம், யாழ்ப்பாணம். அல்லது ஐயாத்துரை சரஸ்வதி, இராசேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு. 2448

என்ஜின்

லோஞ்சி அல்லது மீன்பிடி பெரிய வள்ளத்திற்கு பூட்டக்கூடிய 6 சிலிண்டர் பேக்கின்ஸ் என்ஜின் வேகமாக ஓடக்கூடிய, நல்ல நிலையிலுள்ளது விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசங்களில் தொடர்பு கொள்ளவும். கா. க. விசுவலிங்கம், 168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், 170, சுங்க வீதி, திருகோணமலை. 2450

For Sale: 12 Larchchams Land (divided or Lot) on Brown Road Jaffna and 3 1/2 Larchchams with foundation for five shops on Kankesanthurai road Jaffna near Thattatheru Junction. Offers 8, First cross street Jaffna 2443

## எதிரிகள் விடுதலை

வல்வெட்டித்துறை, வியா.

பருத்தித்துறையைச் சேர்ந்த ஆர். நவரத்தினம் கே. ஞானேந்திரம் ஆகிய இருவரும் அதே இடத்தைச் சேர்ந்த எஸ். அன்னபாக்கியம் என்ற பெண்ணைத் தகாத வார்த்தைகளால் தூஷித்ததாகவும், அதே நேரத்தில் 1-ம் எதிரியான நவரத்தினம் கத்தியால் வெட்டுவதாகப் பயமுறுத்தியதாகவும் குற்றஞ்சாட்டித்தொடரப்பட்ட வழக்கில் தம்பிராசா, அன்னபாக்கியம் ஆகியோர் சாட்சியமளித்த பின் எதிரிகள் இருவரையும் சுற்றவாளிகளாகக்கண்டு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா விடுதலைசெய்தார்.


இப்பொழுது திரையிடப்படுகிறது

ரீங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] | காமினி [மருதானை]
ராஜ் [நீர்கொழும்பு] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டக்களப்பு] | ஸ்ரீ கிருஷ்ணு [திருமலை]

தென்னகமெங்கும் வெற்றி எட்டுத்திக்கு மெட்ட கொட்டுமுரசு கொட்டி 100 நாட்களுக்கு மேல் ஓடிய எழில் வண்ண ஓவியம்!
புதுமை நிறைந்த பொழுதுபோக்குச் சித்திரம்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
அசோகன் - நாகேஷ் - மனோரமா - ராமதாஸ்
ரி. ஆர். ராமச்சந்திரன் - மாதவி
நடித்த




ஏவி. எம். புரொடக்ஷன்ஸ்
அன்பேவா
(ஈஸ்ட்மென் கலர்)
கதை, டைரெக்ஷன்: ஏ. ஸி. திரிலோகசந்தர்
இசை மெல்லிசைமன்னர் எம். எஸ். விஸ்வநாதன்

இன்னிசை விருந்து
இராமநாதன் [இசைக்கல்லூரி] அக்கடமி நிதிக்காக
நீதியரசர் வை. மாணிக்கவாசகர் ஆதரவில்
30-7-67 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு
யாழ். நகரமண்டபத்தில்
இராமநாதன் அககடமி அதிபரும், சென்னை அரசாங்க இசைக் கல்லூரிப் பேராசிரியருமான
பேராசிரியர் எம் ஏ. கல்யாணகிருஷ்ண பாகவதர்
இன்னிசை விருந்தளிக்கிறார்.
வயலின்: சங்கீதபூஷணம் வி. கே. குமாரசாமி
மிருதங்கம்: சங்கீதபூஷணம் ஏ. எஸ் இராமநாதன்
கெஞ்சிரா: திரு. கே. கணேசன்.
கட்டணம் ரூ 10/-, ரூ 5/-, ரூ 3/- மாணவர்கள் ரூ 1/-
டிக்கெட்டுகள் கிடைக்குமிடம்:-
A. S. சங்கரப்பிள்ளை அண்ட் சன்ஸ்,
166, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 3

# "அப்பாவிடம் இரண்டு கார்கள் உண்டு ஆனால் அம்மா டாக்ஸியில் செல்வார்"

## பத்மினி குலரத்தின கொலை வழக்கில்

## 11-வயது மகள் சாட்சியம்

காலி, வியா.

எனது தாயார் மேல் மாடியில் பூட்டப்பட்டிருக்கும் அறைக்கு அருகில் உள்ள குளிக்கும் அறையில் வாழ்ந்து வந்தார். எனது தந்தை கீழ் வீட்டில் குளிர் சாதன மூட்டிய அறையில் வாழ்ந்து வந்தார். நானும் எனது சகோதரியும் கீழ் வீட்டிற்கு சாப்பிடச் செல்வோம். எனது தாயாருக்கும் சாப்பாடு எடுத்து வருவோம்.

பத்மினி குலரத்தின கொலை வழக்கில் சாட்சியமளித்த டாக்டர் குலரத்தினவின் 11 வயதான அசினி குலரத்தின மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு காலி மேலதிக மாஜிஸ்திரேட் திரு. கொல்வின் மென்டிஸ் முன்னிலையில் நடைபெறுகிறது.

அசினி குலரத்தின சாட்சியமளித்த போது மேலும் கூறியதாவது:

நான் காலியிலுள்ள கல்லூரியின் 6-ம் வகுப்பு படித்து வருகிறேன். நேற்று நடந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டேன். தற்பொழுது நான் எனது மாமியாரான திருமதி சூரியவன்சாவுடன் வசித்து வருகிறேன். எனது தாயார் ஏப்ரல் 9-ம் திகதி மரணமானார். அச்சமயம் நான் எனது தாயாருக்கு அருகில் நின்றேன். தயார் மரணமானபோது எனது சகோதரி சுவாரியும் மேல் மாடியில் உள்ள அறையில் வசித்து வந்தார். அந்த அறைக்கு பின் பக்கத்தால் வாசல் உண்டு. எங்கள் அறையிலிருந்து மற்ற பகுதிக்கு வழியுண்டு. ஆனால் அது பூட்டப்பட்டிருந்தது.

எனது தாயார் சாப்பாட்டிற்காக ஒரு பையில் கோப்பையை கீழ் வீட்டிற்கு அனுப்புவார். எனது தகப்பனார் வேறாக வாழ்ந்து வந்தார். அவரிடம் குதிரையும், குதிரை சவுக்கும் உண்டு. ஒருநாள் என் தகப்பனார் மேல் மாடிக்குச் சென்று, தாயாரை குதிரை சவுக்கால் அடித்ததைக் கண்டேன். அந்தத் திகதி எனக்கு ஞாபகமில்லை. எனது சகோதரரான ரவீந்திரா மேல் மாடியில் ஒரு அறையில் வசித்து வந்தார். அவர் கீழ் வீட்டிற்கு சென்று சாப்பிடுவது வழக்கம். தயார் என்னிடம் அல்லது எனது சகோதரி சுவாமியிடம் மேல் மாடிக்கு சாப்பாடு எடுத்து வரும்படி கூறுவார். நான் சாப்பாட்டை மேசைக்கு கொண்டு சென்று பரிமாறுவேன். எனது தயார் இறந்த பின்பு நான் பெரியம்மாவிடம் சென்றேன். எனது அண்ணன் இரு தடவை அவ்விடம் வந்தார். எனக்கு கட்டளை கிடைத்து இரு தினங்களுக்குப் பின் ஒரு தடவை வந்தார். ஐந்து நாட்களுக்கு முன்பும் அண்ணனை கல்லூரி வாசலில் சந்தித்தேன். அப்பொழுது எனது தகப்பனாரின் மூத்த சகோதரனும், மாமியும், என் தகப்பனாரின் சகோதரி ஒருவரும் வந்திருந்தனர். அந்த மாமி இன்று கோர்ட்டிற்கு வந்திருந்தார். வீட்டிற்கு சாப்பிட வரும்படி அண்ணன் கேட்டார்.

எதிரியானசோபியா இரவு சாப்பாடு தயார் செய்வார். மற்ற எதிரியான சிசிலின் காலை, மத்தியான சாப்பாடு தயார் செய்வார். இருவரும் வெவ்வேறு அடுப்பில் சமைப்பார்கள். எனது மாமனாரான பேர்ஸி குலரத்தினவிற்கு நல்ல சாப்பாடு கிடைக்கும். அவருக்கு நல்ல சாப்பாடு ஏன் கிடைப்பதென்று எனக்கு தெரியாது.

எனது தகப்பனார் ஒரு சிகிச்சை நிலையத்தை நடாத்தி வந்தார். இந்த சிகிச்சை நிலையம் எங்கள் வீட்டிற்கு அருகில் இருந்தது. எனது தகப்பனாரிடம் இரண்டு கார்கள் உண்டு. ஆனால் என் தாயார் டாக்ஸியில் செல்வதுதான் வழக்கம். தாயார் எதற்காக டாக்ஸியில் போக விரும்புகிறார் என்று எனக்கு தெரியாது. வீட்டிலுள்ள டெலிபோன் பூட்டப்பட்டிருந்தது. தாயார் டெலிபோனில் பேச அனுமதிக்கப்படுவதில்லை. தாயார் டெலிபோனில் பேச விரும்பினால் பக்கத்திலுள்ள முஸ்லீம் வீட்டிற்கு சென்று பேசுவார். எனது தகப்பனாரின் அல்லது சோபியாவின் அனுமதியுடன் எனது சகோதரி டெலிபோனில் பேசுவார்.

இரண்டாவது எதிரியான பெரியம்மா, எனது தாயாருடன் சந்தோஷமாக இருக்கவில்லை. பெரியம்மாவுடன் நான் அன்புடன் இருந்தேன். வீட்டின் மற்ற பகுதிகளில் என் தாயார் நடமாடுவதை நான் பார்த்ததில்லை. மேல் மாடியிலுள்ள தனது அறையில் மட்டும் இருப்பார். எனது தாயாருக்கு காப்பி, தேநீர் கூட கொடுப்பதில்லை. குளிக்கும் அறையிலுள்ள பைப்பிலிருந்து தண்ணீர் மட்டும் குடிப்பார்.

எனது பெரியம்மா, 3-ம், 4-ம் எதிரிகளிடம் என்ன சாப்பாடு தயார் செய்ய வேண்டுமென்பதை கூறுவார். நான் அல்லது சகோதரிதான் அம்மாவிற்கு சாப்பாடு கொண்டு செல்வோம். நான் சிசிலின் சமைக்கும் அடுப்படிக்கு சென்றிருக்கிறேன். சிசிலின் அம்மாவின் இரவு சாப்பாட்டை தருவார். பாண் பட்டரும் கொண்டுசெல்வேன். அம்மா குளிப்பதற்கு குழாய் நீரைப் பாவிப்பார்.

சம்பவம் நடந்த தினம் நான் அம்மாவிற்கு காலைச் சாப்பாடு கொண்டுசென்றேன். அதில் பலாக்கொட்டை சம்பலும் தேங்காய்ப்பூவுமிருந்தது. அன்று சம்பளதினமாகையால் அம்மா, எனது மாமியாரான சூரியவன்சா வீட்டிற்குச் செல்லவிரும்பினார். அம்மா அன்று மத்தியான சாப்பாட்டைக் கொண்டு வரும்படி கூறினார். நான் அடுப்படிக்குக் கோப்பையைக் கொண்டுசென்றேன். சிசிலின் மத்தியான சாப்பாட்டைத்தந்தார். அப்பொழுதுசோபியாவும் அடுப்படிக்கு வந்து என்னைக் கூட்டிச்சென்று, அதேகோப்பையில் மீன்கறியும், அச்சாறும் தந்தார். ஒருசட்டியிலிருந்து மீன்கறி எடுத்துத்தந்தார். அச்சமயம் அப்பா வீட்டில் இருக்கவில்லை. எனது பெரியம்மாவீட்டிலிருந்தார்.

இவ்வழக்கில், டாக்டர் டி ஜி.எஸ். குலரத்தின, அவரது தாயார் திருமதி லோரா குலரத்தின, அவரது பணிப்பெண்களான டபிள்யு எம். சோபியா, சிசிலின் ஆகியோர், திருமதி பத்மினி குலரத்தினவை ஏப்ரல் 9-ம் திகதி நஞ்சூட்டிக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

1ம் எதிரிசார்பில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும், 2ம் எதிரிசார்பில் ஏட்லி பெரேராவும், 3ம், 4ம் எதிரிகள் சார்பில் பீட்டர் எதிரப்பிள்ளையும் ஆஜரானார்கள். முடிக்குரியதரப்பில் திரு. ஏ.சி.டி. சொய்ஸா, திரு. செனிவரத்ன ஆகியோர் ஆஜரானார்கள்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மூதூர்க்கடிதம்

# வங்கிவேலை நிறுத்தம்: விவசாயிகள் கஷ்டம்

[நமது நிருபர் ஓ. தர்மராசா]

மூதூர், வியா.

திருக்கோணமலைமாவட்ட கூட்டுறவு வங்கியில் அண்மைக் காலமாகநடைபெற்று வரும் தொழிற் சங்க ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக மூதூரில் உள்ள அதன் கிளை வங்கியும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மூதூர்ப் பகுதி விவசாயிகளுக்கு அரசினர் வழங்கும் கடன்கள் எல்லாம் இவ் வங்கியின் மூலமாகவே கொடுக்கப்பட்டு வருவதால் தற்சமயம் அமுல் நடத்தப்படும் கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ளமுடியாது விவசாயிகள் திண்டாடுகின்றனர். தற்சமயம் பிரஸ்தாப வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்ளாத இரு ஊழியர்களே காரியாலயத்தின் பாக்கி வேலைகளைச் செய்து வருகின்றனர். ஏறத்தாழ 3 வாரங்களைத் தாண்டிவிட்ட இவ் வேலை நிறுத்தம் தொடருமானால் விவசாயிகள் தமக்கான அரசினர் நிதி உதவிகளை இம்மாதம் 28-ந் திகதி திறக்கப்படவிருக்கும் திருக்கோணமலைமக்கள் வங்கிக் கிளை மூலம்பெற்றுக் கொள்ள அரசினரிடம் தூது செல்வார்களென அறியப்படுகிறது. இவ் வேலை நிறுத்தம் நகை அடகு பிடித்தல் தொழிலையும் பாதித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## பஸ் சேவை

மூதூர், வியா.

கொட்டடியாபுரப்பற்றைச் சேர்ந்த சுமார் 40ஆயிரம் மக்களுக்காக நடாத்தப்பட்டு வரும் பஸ் சேவை மிகவும் ஒழுங்கீனமாக நடைபெற்று வருகிறது. 40 ஆயிரம் மக்களின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்ய மூதூரில் அமைவுற்றிருக்கும் இ.போ.ச. டிப்போவில் உள்ளதோ ஆக 6 பஸ்களே தான். அதில் இரண்டு பஸ்கள் பழுதுற்ற நிலையில் கிடக்கின்றன. மிகுதியாக ஓடும் நான்கு பஸ்களும் அடிக்கடி பழுதாகியே சேவையை நடாத்துகின்றன. இதனால் பிரயாணிகள் தமது அருட கருமங்களை முடிக்கச் சிரமப்படவேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

தற்சமயம் இப்பகுதியில் நடைபெற்ற சில விபத்துக்கள் காரணமாக மூன்றுசாரதிகள் தற்காலிக வேலைநீக்கத்தில் இருப்பதானது பாதிப்பை மேலும் அதிகரித்துள்ளது. சீரான பஸ்களை சேவைக்கு விட்டு சீரான சேவைகளை நடத்தும்படி இ. போ. சபையை எம்.பி.க்கள் உட்பட பல கி.சபைத் தலைவர்கள் வேண்டியும் கவனிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. நேரத்திற்குபஸ்கள் கிடைக்காமல் போவதால் பாடசாலை ஆசிரியர்களும், மாணவ, மாணவிகளும் பிற அரசாங்க ஊழியர்களும்மிகவும் சிரமப்படுகின்றனர்.

நெடுந்தீவில்

## கூட்டுறவின் முதல் எதிரி

மல்லாவி திங்.

வடபகுதி மக்களிர் 90, சதவீதமானோர் கூட்டுறவு வளர்ச்சிக்கு உழைப்பதனாலேயே கூட்டுறவு இயக்கம் இப்பகுதியில்வளர்ந்தோங்கியுள்ளது. கூட்டுறவு இயக்கத்தின் உதவியால் ஏழை விவசாயிகள் பலர் நன்மையடைகிறார்கள் உணவுஉற்பத்திப்பெருக்கத்தில் கூட்டுறவு இயக்கம் முக்கிய பங்கு வகிக்கிறது.

இவ்வாறு துணுக்காய்ப் பிரிவுக்காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்து யோகபுரம் முதலாம்பகுதி 3-ம் யூனிற் அரசினர் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் துணுக்காய்ப்பிரிவு கூட்டுறவுச் சங்கங்களில் சமாஜத்தின் ஆதரவில் நடைபெற்ற கூட்டுறவு விழாவுக்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையில் கூறினார்.

திரு. தம்பிமுத்து மேலும் பேசுகையில் கூறியதாவது:

தனது சொந்தத் தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்ய விரும்பும் சுயநலவாதியே நல்ல இயக்கமான கூட்டுறவு இயக்கத்தின் முதலாவது எதிரி இத்தகைய சுயநலவாதிகள் கூட்டுவுச் சங்கங்களில் இருந்தால் இந்த சங்கங்கள் ஒருபோதும் உருப்படாது. சுயநலவாதிகளிடமிருந்து கூட்டுறவுச் சங்கங்களைக் காப்பாற்றுவது ஒவ்வொருவரின் தலையாய கடமை என்பது உணரப் படவேண்டும்.'

கூட்டுறவு கொடியை ஏற்றிவைத்து தென்யாழ்ப்பாணக்கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். கந்தசாமி பேசுகையில் புதிய கடன் திட்டம் விவசாயிகளுக்குப்பல நன்மைகளைப் புரியும் என்றும் வட்டி அதிகமாக இருந்தாலும் இக்கடன் உரிய நேரத்தில் அங்கத்தவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒழுங்கு நடைமுறைகள் ஏற்படும் என்றும் கூறினார். திரு. கே. பொன்னையா, செ. மயில்வாகனம்' பொன்னுத்துரை, க. சோமசுந்தரம்க. பெரியதம்பி உட்பட பலர் உரை நிகழ்த்தினார்கள்.

டாக்டர் மனைவி கொலை வழக்கு

# காலஞ்சென்றவரின் மகனுக்கு மாஜிஸ்டிரேட் எச்சரிக்கை

## சகோதரிகளுடன் சாட்சிமபற்றி பேசினாராம

காலி, புதன்

முடிக்குரியதரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சில விஷயங்களை ஒட்டி முதல் எதிரியான டாக்டர் குலரத்தினவினதும் காலஞ்சென்ற பத்மினி குலரத்தினவினதும் புதல்வர் 18 வயது ரவீந்திரகுலரத்னவை சாட்சியமளிக்க தாம் அழைக்கப் போவதாக இன்று காலி மேலதிக நீதவான் திரு. காலின் மெண்டிஸ் கோர்ட்டில் கூறினார்.

பத்மினி கொலை வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. இந்த வழக்கில் டாக்டர் குலரத்தினமீதும், அவரது தாயார் மீதும், இரண்டு வேலைக்காரிகள் மீதும் டாக்டரின் மனைவியான பத்மினி குலரத்தினவை நஞ்சூட்டி கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ரவீந்திர பத்மன் டிசில்வா குலரத்ன மாஜிஸ்டிரேட்டின் கேள்விகளுக்கு [illegible] பதிலளிக்கையில், ஜூன் 29-ம் திகதி தம்மை துப்பறியும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கிதுல்கொட தமது அத்தையான திருமதி சூரியவன்ச வீட்டுக்குப் போனது பற்றி விசாரித்ததாகவும், அங்கே தமது இரு சகோதரிகளும் வசிப்பதாகவும் கூறினார். தமது சகோதரிகள் தகப்பனுருக்கு எதிராக சாட்சியமளிப்பதைத் தாம் விரும்பவில்லையென்றும் அதனால் அங்கே போவதாகவும் இன்ஸ்பெக்டரிடம் கூறியதாக அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

தகப்பனுருக்கு எதிராக பொய்ச் சாட்சியமளிக்க வேண்டாமென்று சகோதரிகளைக் கேட்டுக்கொண்டேன். அத்தையிடமும் அப்படியே கூறினேன். அத்தையாரும் அவ்வாறே சகோதரிகளிடம் கூறியதாகக் கூறினார்

அவர் மேலும் [illegible]கும் பாட்டிக்கும், இரண்டு வேலைக்காரர்களுக்கும் எதிராக சகோதரிகள் சாட்சியமளிக்கக்கூடாதென தாம் நினைத்ததாகவும் எதிரிகள் நால்வரும் மீண்டும் வீட்டுக்குத் திரும்பிவரவேண்டுமெனத் தாம் விரும்பியதாகவும் கூடினார்.

கொலைவழக்கில் கொடுக்கப்படவிருக்கும் சாட்சியம் பற்றி கதைப்பது பாரதூரமான விஷயம் என்று தாம் நினைக்கவில்லையென்றும் தமது சகோதரிகளுடன் பேசும்படி தமக்கு எவரும் சொல்லித்தரவில்லையென்றும் அவர் கூறினார்.

கொலைவழக்கு சாட்சியங்களில் தலையிடுவது சட்டப்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும் என்று சாட்சியை மாஜிஸ்டிரேட் எச்சரித்தார்.

## கத்திக்குத்து

யாழ்ப்பாணம், வியா.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கதிரிப்பிள்ளை இராசா [30 வயது] என்ற நபர் ஆபத்தானநிலையில் கத்திக்குத்துக் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று இரவு அனுமதிக்கப் பட்டுள்ளார். நேற்று மாலை நீராவியடியில் இவர் கிறிஸ் கத்தியால் குத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. பொலிஸ் இதுசம்பந்தமாக புலன்விசாரணை செய்கின்றனர். எவரும் கைதுசெய்யப் படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org